OS. 70/2022

**நாள். 01.03.2024**

**வா.சா. 1 –** பாலு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்போது வயது 80 ஆகும். நான் ஆசிரியராக பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் நிரூபண வாக்குமூலம் மற்றும் வழக்குரையிலும் பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக கூறவில்லை என்றால் சரிதான். நான் பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு உரிமம் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி தொழில்கள் செய்வதற்கு ஸ்தாபனம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் தற்போது வருமான வரி செலுத்தும் நபர் அல்ல. எனக்கு 4 பெண் பிள்ளைகள் மற்றும் 1 மகன் ஆவார். 4 பெண் பிள்ளைகளையும் திருமணம் செய்து அவரவர் கணவர் வீட்டில் வாழ்கின்றனர். நான் தற்போது தனியாகத்தான் வசித்து வருகிறேன். என் மகள் வீட்டில் இருந்து எனக்கு சாப்பாடு வருகிறது. என் மனைவி காலமாகிவிட்டார். என் மகன் வேலூரில் அவரது குடும்பத்துடன் தனிக்குடித்தனம் செய்து வருகிறார். ரூ.17 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்ததாக வருமான வரி கணக்கில் நான் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. ரூ.17 லட்சம் கொடுத்தது வருமானவரியில் காட்டவில்லை என்பதால் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆடுகள், மாடுகள் வைத்து தொழில் செய்து வருகிறார். பிரதிவாதி ஆடுகள், மாடுகள் வைத்து தொழில் செய்து வருவதை பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. அவர் தொழில் குறித்து விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் 2007 டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றேன். நான் ஓய்வு ஊதியம் பெற்று வருகிறேன். வருமான வரி பிடித்தத்திற்காக DTS எதுவும் நான் பெறுவதில்லை. நான் தற்போது ரூ.43,575/– ஓய்வூதியமாக பெற்று வருகிறேன். மருத்துவ செலவுக்காக ரூ.20 ஆயிரம் செலவு செய்து வருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் 2009 ல் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். இதய அறுவை சிகிச்சை செய்ததினால் மாத மாதம் ரூ.2000 செலவு செய்கிறேன். என் மகள் வீட்டில் வசித்து வருகிறேன் என்றும்

அவரது கணவரையும் என் மகளின் குழந்தையையும் நான் பராமரித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் மருத்துவ செலவு மற்றும் என் மகள் குடும்பத்தையும் பராமரித்து வருவதால் ஓய்வு ஊதிய தொகை சரியாக வருகிறது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)